முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.31/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 10.08.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 10.08.2026 | சாட்சி | வா.சா. 2 |
| பெயர். | கணேஷ் | வயது.. | 29 |
| தந்தை பெயர். | வெங்கடேசன் | ஊர்.. | கண்ணங்குடி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. முதல் விசாரணையுடன் வழக்கு சம்மந்தமான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. தற்போது வயது 29. வாதி எனது தாய் மாமன். ராமசாமி நாயக்கர், குப்புசாமி நாயக்கர், கொடியான் மற்றும் கிருஷ்ணனை நான் பார்த்ததில்லை. வாதி வழக்கில் என்ன பாரிகாரம் கேட்டிருக்கிறார் என்றால் வழக்கு சொத்து ஒப்புதலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ஒப்புதல் தவிர வேறு பரிகாரம் கேட்கவில்லை. வழக்கு சொத்துக்கள் 3 ஐட்டமாக இருக்கிறது. 1 வது ஐட்ட வழக்கு சொத்தில் புல எண்.184/5, அதன் விஸ்தீரணம் 1 3/4 செண்ட். 2 வது ஐட்ட வழக்கு சொத்தில் புல எண்.184/5, அதன் விஸ்தீரணம் 1 3/4 செண்ட். 1 வது ஐட்ட சொத்தின் சக்குபந்தி வடக்கு, கிழக்கால் மெயின் ரோடு, தெற்கு, மேற்கில் இருப்பவர்கள் பெயர்கள் தெரியாது. 2 வது ஐட்ட சொத்தில் சக்குபந்தி 1 வது ஐட்ட சொத்திற்கு இருப்பது போன்று தான்.

2. 3 வது ஐட்ட வழக்கு சொத்தில் புல எண்.184/5. ராமசாமி நாயக்கர் எப்போது வழக்கு சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் தெரியாது. குப்புசாமி நாயக்கர் அவர் மகன்களான கொடியான், கிருஷ்ணன் எந்த ஆண்டு பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் 13.09.1948. பாகப்பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேன், அதில் எத்தனை ஐட்ட சொத்துக்கள் இருக்கிறது என்றால் 3 ஐட்ட சொத்துக்கள் இருக்கிறது. 3 ஐட்ட சொத்துக்கள் யார் யாருக்கு பாகமாக கொடுக்கப்பட்டது என்ற விபரம் தெரியாது. கொடியான் எந்த ஆண்டு யாருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் 1970 இல் சின்னபொன்னுவிற்கு கொடுத்தார்.

சின்னபொன்னு பிரதிவாதி ராமமூர்த்திக்கு எந்த ஆண்டு கிரயம் கொடுத்தார் என்றால் 1982. வாதியுடன் பிறந்த சகோதரிகள் மூவர் ஆவர். அவர்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. அவர்கள் சம்மதத்துடன் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிக்க வழக்கு சொத்தில் எந்த பாத்தியமும் இல்லை என்றாலும், பேராசை காரணமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி எனது மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.